## 3. நீத்தார் பெருமை

21. *ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு*

**ஒழுக்கத்தில் உறுதியான துறவியின்**
**ஒருங்கே விளங்கும் பெருமைதனை**
**ஒப்பார் இல்லா சான்றோரின் நூல்கள்**
**ஒருமுகமாக பாராட்டும் !**

22. *துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
*இறந்தாரை எண்ணிக்கொண் டற்று*

**சுற்றும் இவ்வுலகில் இறந்தாரை எண்ண முடியாதது போல்**
**முற்றும் துறந்த முன்னோரின் பெருமைதனை**
**சற்றும் அளவிடவே முடியாது !**

23. *இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்*
*பெருமை பிறங்கிற் றுலகு*

**பிறப்பும் இறப்பும் என்ற இருவகையான**
**பிரிக்க முடியாத நிலைகளையும் நன்கு ஆராய்ந்து**
**பிரபஞ்சத்தில் துறவு கொண்டவர்களே பெருமைக்குரியவர் !**

24. *உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்*
*வரனென்னும் வைப்பிற்கோர் வித்து*

**ஐம்பொறிகளை அறிவென்ற அங்குசத்தால்**
**ஐயமுற அடக்கிக் காத்தவனே –**
**ஐந்திணைக்கு அல்ல மேலான வீட்டிற்கும் ஏற்ற விதையாவான் !**

25. *ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்*
*இந்திரனே சாலுங் கரி*

**ஐந்து புலன்களையும் அடக்க முடியாமல்**
**ஐம்பதிலும் ஆசைகளுக்கு ஆட்பட்டு**
**ஐயகோ என வழி தவறும் மனிதனுக்கு**
**வானத்து அரசன் இந்திரனே சாட்சி!**

26. *செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்*

**பெருமை தரும் செயல்களை புரிவோர் என்றும்**
**பெரியோர் தானே !**
**சிறுமை தரும் செயல்களைச் செய்வார் என்றும்**
**சிறியோர் தானே !**

27. *சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்*
*வகைதெரிவான் கட்டே உலகு*

**ஓங்கிய உணர்வுகளை – சுவை, பார்வை, தொடு உணர்வு,**
**ஓசை, மணம் என்ற ஐந்தினையும்**
**ஆராய்ந்து அடக்குபவனின்**
**ஆற்றலுக்குள் உலகம் அடங்கும் !**

28. *நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்*

**முழுமையான சான்றோர்களின் பெருமையை**
**முழு நிலவாய் ஒளி விடும் அவர்களின் அற வழி வந்த**
**முது மொழிகளும் – நூல்களும்**
**முத்திரை பதிக்கும் உலகத்தில் நிரந்தரமாக !**

29. *குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி*
*கணமேயுங் காத்தல் அரிது*

**குணக்குன்றாய் வாழும் சான்றோர்களுக்கு**
**குறுகிய கணமே கோபம் நின்றாலும்**
**குத்தீட்டியாய் பாய்ந்து விடுவதால் தாங்குதல் கடினமே !**

30. *அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண் டொழுக லான்*

**எவ்வுயிர்க்கும் அன்பு செலுத்துபவர்**
**எல்லோரும் 'அந்தணர்' எனப்படுவர் ! இச்சொல்**
**சாதியம் சார்ந்தது அல்ல; சக உயிர் நேசிப்பே ஆகுமாம் !**

# 28. கூடா ஒழுக்கம்

271. *வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்*
*ஐந்தும் அகத்தே நகும்*

**வஞ்ச மனம் கொண்ட**
**வஞ்சகனின் உடம்பில் கலந்திருக்கும்**
**வகை ஐந்தும் பூதங்களும் அவனின்**
**வருத்தும் பொய் ஒழுக்கத்தை கண்டு**
**வகை தொகை இல்லாமல் தங்களுக்குள் நகைக்கும் !**

272. *வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்நெஞ்சத்*
*தானறி குற்றப் படின்*

**வாய்த்த நெஞ்சமே குற்றம் எனச் சுட்டிக்காட்டியும்**
**வாழ்க்கையில் குற்றங்களைச் செய்தால்**
**வானுயர்ந்த தவக்கோலம் கொண்டவராயினும்**
**வாய்ப்பே இல்லை பயன் பெற !**

273. *வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்*
*புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று*

**தவக் கோலத்தில் தன்னை மறைத்துக் கொண்டு**
**தவறான காரியங்களை செய்வது**
**பசு ஒன்று புலித்தோலை போர்த்திக் கொண்டு**
**பயிரை மேய்வது போன்றது !**

274. *தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து*
*வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று*

**வேடன் ஒருவன் புதரில் மறைந்து**
**வேவு பார்த்து வலை வீசி பறவைகளை**
**வேட்டையாடுவது போலத் தான் தவக்கோலத்தில் மறைந்திருந்து**
**வேண்டாத காரியங்களை பொய்தவத்தார் செய்வது !**

275. *பற்றற்றேம் என்பா படிற்றொழுக்கம் எற்றெற்றென்*
*றேதம் பலவுந் தரும்*

**எந்தப் பற்றும் இல்லையென**
**எளிதாக வேடம் போட்டு**
**ஏமாற்றும் போலி தவத்தார் பின்**
**ஏன் செய்தோம் ஏன் செய்தோம் என்றே**
**ஏங்கித் துன்பப்படுவர் !**

*276.* *நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து*
*வாழ்வாரின் வன்கணா ரில்*

**நெஞ்சில் ஆசைகளைத் தேக்கிக் கொண்டு**
**நேரெதிராக ஆசை இல்லாதாராய்**
**வஞ்சித்து வாழ்கின்றவர்களைப் போல்**
**வழகட்டிய கொடியவர்கள் யாருமில்லை !**

*277.* *புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி*
*மூக்கிற் கரியா ருடைத்து*

**குன்றி மணி போல் புறத் தோற்றத்தில்**
**குளிர் சிவப்பாக இருந்தாலும் மனதில்**
**குறுகிய மூக்கைப் போல கருத்த**
**குறியீடாக மனம் படைத்தவர் உள்ளனர் !**

*278.* *மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி*
*மறைந்தொழுகு மாந்தர் பலர்*

**நீருக்குள் மூழ்கியோர் தம்மை முழுவதுமாக**
**நீரில் மறைத்திருப்பது போல்**
**நீதி வழி மாண்புடையவர் என**
**நீங்காப் புகழில் மறைத்துக் கொண்ட மாசுடையோர் பலர் !**

*279.* *கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கண்ண*
*வினைபடு பாலாற் கொளல்*

**நேராகத் தோன்றும் அம்பு கொடியது !**
**நேரெதிராக வளைந்து நெளிந்து தோன்றும்**
**நேர்த்தியான யாழ் கொம்பு இனியது ! ஆகவே மனிதர்களை**
**நேரிடும் வினைச் செயல்களால் மட்டுமே மதிப்பிடுக !**

*280.* *மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்த தொழித்து விடின்*

**பழிக்கின்ற செயல்களைச் செய்து உலகத்தின்**
**பழிப்பிற்கு ஆளாகின்ற துறவி, தலைமுடியை**
**மழித்தோ, சடா முடியை வளர்த்தோ கோலத்தை**
**மட்டும் மாற்றிக் கொள்வது ஏமாற்று வித்தையே !**

## 35. துறவு

**341.** *யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்*

**எந்தெந்தப் பொருளின் மீது ஆசை**
**எண்ணத்தையும், எதிர்பார்ப்பையும், பற்றையும்**
**துறந்தோமோ அந்தந்தப் பொருளினால் வரும்**
**துன்பமும் இல்லை ! துயரமும் இல்லை !**

**342.** *வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்*
*ஈண்டியற் பால பல*

**துன்பம் துளைத்தெடுக்காமல் இருக்க**
**ததும்பும் செல்வம் இருக்கும் போதே**
**துளிர் விடும் ஆசை அனைத்தையும்**
**துறந்து விட்டால் துவங்கும் இன்ப மயம் !**

**343.** *அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்*
*வேண்டிய வெல்லாம் ஒருங்கு*

**அடக்க வேண்டும் அடக்க வேண்டும்**
**ஐம்புலன்களையும் அடக்க வேண்டும் !**
**விட வேண்டும் விட வேண்டும்**
**விரும்பும் தேவைகள் அனைத்தையும் ஒன்றாக !**

**344.** *இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை*
*மயலாகும் மற்றும் பெயர்த்து*

**தவமிருக்க ஒரு பொருளின் மீது கூட**
**தனித்த ஆசை இருத்தல் கூடாது !**
**தவசியானவன் தனித்ததொரு பொருள் மீது**
**தணியாத மோகம் கொண்டால் அது**
**தயங்காமல் மேன்மேலும் மயக்கி விடும் !**

**345.** *மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்*
*உற்றார்க் குடம்பும் மிகை*

**பிறவித் துன்பத்தைப் போக்கிக் கொள்ள**
**பிறப்பெடுத்தத் துறவிக்கு தன்னுடன்**
**பிறந்த உடம்பே மிகை என்பதால்**
**பிற பொருட்களோடு தொடர்பு எதற்கு ?**

**346.** *யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்*
*குயர்ந்த உலகம் புகும்*

**யான் என்ற செருக்கையும் எனது எனும் கர்வத்தையும்**
**யாங்கணுமே விட்டவன்**
**வானில் வாழ்கின்ற தேவர்களையும் விஞ்சி**
**வான்புகழ் நிலைமை அடைவான் !**

**347.** *பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்*
*பற்றி விடாஅ தவர்க்கு*

**பற்றுகளை பற்றிக்கொண்டு விடாதவர்களைப்**
**பல ஆசைகளை விடாது பற்றுபவர்களைப்**
**பற்றுமே விடாது இறுக "பிறவித் துன்பங்கள்" !**

**348.** *தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி*
*வலைப்பட்டார் மற்றை யவர்*

**முற்றும் துறந்தவரே துறவிகளில்**
**முதன்மையானவர் ! அவ்வாறு**
**முழுதும் துறக்காத மற்றவர் அறியாமை எனும்**
**முள்ளின் வலையில் அகப்படுவர் !**

**349.** *பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று*
*நிலையாமை காணப் படும்*

**பிறக்கும் ஆசைகளிலிருந்து அறவே விலகி விட்டால்**
**பிறவித் துன்பம் விலகி "பிறப்பு" விடும் !**
**பிணைக்கும் பற்றை விடாத போது**
**பிறப்பும் இறப்பும் மாறி மாறி வந்து "நிலையாமையை" நாட்டும் !**

**350.** *பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு*

**எல்லாப் பற்றுகளையும் விட்டொழிப்பதற்கு**
**எதிலும் பற்றற்ற இறைவனை**
**எப்படியும் பற்றி விடுங்கள் !**